

# காஞ்சி

வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 சித்திரை 22 (5-5-74) | இதழ்: 42

★

உள்ளே......

அவன் கேட்பது வாழ்வு
(அறிஞர் அண்ணா)

★

உவமை
(கவிதை)

★

கவிஞர் கண்ட நாடு
(கட்டுரை)

★

கற்பு
(சிறுகதை)

★

## உறுதி கொள்வோம்

(கவிஞர். கருமலைத்தமிழாழன்)

நாட்டுக்கே தினமுழைத்து
நலிகின்ற தொழிலாளி
வீட்டுக்கே இன்பத்தை
விளைக்கின்ற செயலுக்கு
காட்டுக்கே எரித்தநிலா
கனவுகளைப் போலின்றி
கேட்டுக்கே வெடிவைத்து
மேன்மைதந்த புரட்சியே, மே!

கதிருக்கே விழிப்பதன்றி
கங்குலிலும் வேர்வைதனில்
பதிலுக்கே வரவுயின்றி
பாடுபடும் தொழிலாளி
உதிரிக்கே தென்றல்போல்
உழைப்பிற்கு எட்டுமணி
விதிதனக்கே உயர்வான
விளைச்சலினைத் தந்ததே, மே!

கண்ணுக்கே இமையைப் போல்
கடமைக்கே தோள் கொடுத்து
உண்மைக்கே புகழைப்போல்
முதலாளி தொழிலாளி
பண்பிற்கே இலக்கணமாய்
பழகிதினம் உற்பத்தி
விண்ணிற்கே போவதற்கு
இன்றுறுதி எடுப்போமே!

விலை: 0-25 காசு

# கவிஞர் கண்ட நாடு:

## உமறுப்புலவர்

இசுலாமிய இலக்கியத்துக்குத் தாய் நூலாக அமைந்திருப்பது அருள்மறையாம் திருக்குர்ஆன் ஆகும். அது, உலக முழுமைக்கும் பொதுவுடைமை!

"படித்துச் சுவைத்துப் பண்படைவதற்கு உரியதே இலக்கியம்" என்பதை இலக்கியப்பேழை யாம் திரு குர்ஆன் கூறுவதை, 'ஓதுவீராக...!' என்று தொடங்கும் அருள் திரு முதல் வசனத்தின் மூலம் உறுதி கொள்ளலாம்.

அரசியல் மாற்றங்கள் மத்திய கிழக்கில் ஏற்பட்ட காலத்தில், அரபு முசுலிம் குடும்பங்கள் குடிப் பெயர்ந்து, இசுலாத்தின் பொது இலக்கியமாம்—தித்திக்கும் திருமறையாம்—திருக்குர்ஆனை கையிலேந்தி, அழகுத்தமிழ்நாட்டுக்கு வந்து, தமிழக மன்னர்களைக்கண்டு, வணிகம் செய்து, போர் வீரர்களாகி, அரசவைக்குத் துணைபுரிந்து, இசுலாத்தின் செந்நெறிகளை இந்நாட்டிலே பரப்பி, வாய்மையும் நேர்மையும் பெற்று தமிழ்மக்களைப் பெரிதும் கவர்ந்து, இந்நாட்டுப் பற்றாளர்களாக மாறி, தமிழ் நாட்டை மட்டுமல்லாது, தமிழ் மொழியையும் தங்களுடையதாக்கிக்கொண்டு, இசுலாமியத் தமிழ் இலக்கியங்களைப் படைத்தவர்களில் ஒருவர்தான் உமறுப் புலவர்!

இக்கவிஞரின் காலம் கி. பி. பதினேழாம் நூற்றாண்டாகும். தென்பாண்டி நாட்டில் தொன்மைப் புகழ்மிக்க எட்டயபுரத்தை ஆண்ட குறுநில மன்னராகிய திரு. வெங்கடேசுவர எட்டபூபதியின் காலத்தில் வாழ்ந்தவர் என்றும், அவ்வரசவைப் புலவராய் பணியாற்றியவர் என்றும் தெரியக் கிடக்கின்றது.

பைந்தமிழ்ப் புலவர் உமறு படைத்தவற்றுள், தமிழர்களுக்கு ஓரளவு அறிமுகமாகியிருப்பது, அண்ணல் நபிகள் நாயகம் (சல்-ம்)) அவர்களின் அற வாழ்வை, 5027 திரு விருத்தப்பாக்களில் சிறந்த காவியமாக வடித்து தந்திருக்கும் சீறாப்புராணம் தான்! கவிஞர் உமறு, சீறாமட்டுமல்லாது, 'சீதக்காதி நொண்டி நாடகம்', 'முதுமொழி மாலை' என்னும் வேறு காப்பியங்களையும் தந்துள்ளார்.

சீறாவைப் பாடுவதற்கு முன்னால், வள்ளல் நபிகள் நாயகம் (சல்-ம்) அவர்களை நினைந்து, மனவேதனை யகற்றும் நோக்குடன் 88-'பா' மலர்களால் புனைந்ததே 'முதுமொழி மாலை' எனும் பைந்தமிழ்ப் பாமாலை!

இப் பா மாலையில் 'கடவுள்' என்னும் சொல்லின் ஆட்சியைப் புரிந்து கொள்வது, இன்றியமையாததாகும். 'இறைவன்' என்னும் பொருளின்றி, 'தலைவர்' என்னும் பொருளிலேயே கவிஞர், 'கடவுள்' 'கடவுளர்' என்னும் சொற்களைப் பயன்படுத்தியிருப்பதை பாடல்களில் காணலாம், எடுத்துக் காட்டாக;

'கலைமறை பலவும் உணர்ந்த மெய்ஞ்ஞானக் கடவுளை'
'பொருந்து முக்குணக் கடவுளரை'
'கதிகள்தரு கழலுடைக் கடவுளரை'
'பலகலை யுணர்த்தும் கடவுளை'—

என்று கையாண்டிருக்கும் கனிவைக் காணலாம். முதுமொழி மாலையின் ஒவ்வோரடியிலும் இனிமையும் உயர்வும் களிநடம் புரிகின்றன; வனப்பும் வளமும் பூத்துக் குலுங்குகின்றன. பெருமானார் நபிகள் நாயகம் அவர்களைக் குறிப்பதற்கு கவிஞர் உமறு அவர்கள்,

'மாமறைக் கொழுந்து'
'கதிதரும் வழித் துணைமருந்து'
'புலன்வழி மனஞ்செலா மாதவர்'
'சான்றோர்க்கரிய சான்றவர்'
'அற்புதரறியும் அற்புதர்'
'உண்மையர்க் குண்மை உதவிய தரு'

என்ற தொடர்களைக் கொண்டு பிணைக்கப் பெற்றிருப்பதால் பேரின்பப் பெருக்கிலே திளைக்கின்றோம்.

கம்பராமாயணத்தையும், சீவக சிந்தாமணியையும், சிலம்புப் செல்வத்தையும், தேம்பாவணியையும் நுகர்ந்து கவியழகு கண்ட தமிழ்ப்பேரறிஞர்கள் சீறாவின் காவிய நயத்தையும் நுகர்ந்து பெருங்காப்பியங்களுள் ஒன்றாகப் போற்றுகின்றார்கள். அப்போற்றுதலுக்குரிய சீறாவில், நாட்டுப் படலத்தையும் நகரப்படலத்தையும் நுகரும்போது, பாலைநிலப் பகுதியாகிய அரபு நாட்டைத் தவிர்த்து, செந்தமிழ் நாட்டின் திருவாகவே உருப்பெறுவதை நுகரலாம்.

'செந் நெருப்பினைத் தகடு செய்து, பார்செய்தது ஒக்கும் அச்செந்தரைப் பரப்பை' சோழநாட்டிலே, செயங்கொண்டார் காட்டுகிறார்.

உமறுவோ, அசோகம்—தேக்கு—ஆசினி—பாடலம்—குங்குமம் ஆகிய மரங்கள் நிறைந்த மலை வளத்தை அரபு நாட்டிலே காட்டுகிறார்.

(13-ஆம் பக்கம் பார்க்க)

கவிஞர் கே. எம். ஏ. வகாப்

[29—4—74 அன்று புதுவை, கம்பன் கலையரங்கில் புதுவை அரசு எடுத்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 83-வது பிறந்த நாள் விழாக் கவியரங்கம்.]

# பாவேந்தரின் பாட்டுச் சுவைகள் - "உவகை"

மு.பி. பாலசுப்பிரமணியன். எம்.ஏ,

புதுச்சேரி அரசெடுக்கும் விழாநன் னளில்
புரட்சியுளங் கொண்டகவிப் பெருமை கூறப்
புதியவன்நான் வந்துள்ளேன்; தமிழாம் தாயின்
பொன்னுன திருவடியை வணங்கு கின்றேன்!
மதுச்சுவையும் ஏன்புவிக்கு? பாவேந் தர்தம்
மனங்கவரும் கவிச்சுவை தான் இருக்கும்போ து?
இதழ்ச்சுவையோ சலித்துவிடும்; பாவேந் தர்தம்
இனியகவிச் சுவை என்றும் சலிக்கா தென்பேன்!

நாலுகோடித் தமிழர்களின் இதய நாளம்
நாடிநரம் பத்தனையும் எழுச்சி கொள்ள
வேலும்வில் லும் நிகர்த்த சொற்கள் கொண்டு
வியன் கவிதை வடித்திட்ட பாட்டு வேந்தர்!
காலும்கை யும்மனமும் சோர்ந்தி ருந்த
கனித்தமிழர் எழுச்சியுற்ருர் இவர்எ ழுத்தால்!
பாலும்தே னும்கலந்த பாட்டால் ஈர்த்த
பாரதிதா சன்பெருமைக்(கு) ஈடும் உண்டோ?

வரட்டுவே தாந்தம்தத் துவங்க ளோடு
வைதீகம் கண்மூடி வழக்கம் தன்னை
விரட்டியடித் திட்ட(து) இவர் கவிதைக் கூர்வாள்!
விழித்தெழுந்தார் துயில்நீங்கித் தமிழ்இ
னத்தார்!
மிரட்டுகின்ற 'மேல்மட்டம்' ஆட்டம் காண
மின்னல்எனச் சுழலவைத்தார் கவிச்சி லம்பம்!
புரட்டுகளின் கவர்ச்சியிலே மயங்கா நெஞ்சர்
புரட்சிக்கு வித்தான கவிதை மன்னர்!

காதல்வீ ரம்இரண்டும் கண்க ளாகக்
கருதியதோர் பொற்காலம் சங்க காலம்!
பாதியிலே நுழைந்தவர்கள் தமிழ்ப்பண் பாட்டைப்
பாழாக்கிப் போட்டதுவோ இந்தக் காலம்!
ஆதியிலே நால்வருணம் இல்லை; அந்த
அநியாயம் இப்போதும் தேவை இல்லை!
மேதினியில் 'தமிழ்வருணம்' ஒன்றே என்ருர்!
மேலான இடம்பெற்ருர் நமது நெஞ்சில்!

தரணியிலே தமிழ்ப்பகைக்கு வைத்த வேட்டு;
தமிழுணர்வை ஊட்டுகின்ற இவரின் பாட்டு!
பரணியினை வகுத்தஇனப் பெருமை சாற்றும்
பாவேந்தர் கவிகளோநம் உயிரின் காற்று!
வரகவிபா ரதிதாசன் தேன்கு ழைத்து
வடித்திட்ட கவிதையெலாம் சுவையின் ஊற்று!
சரஞ்சரமாய் இவர்யாத்த கவிகள் எல்லாம்
சஞ்சாரஞ் செய்கின்ற சுவையின் சொர்க்கம்!

திக்கெல்லாம் புகழ் மணக்கும் பாவேந் தர்தம்
தேனமுதக் கவிதைகளின் சுவைகள் எல்லாம்
பக்குவமாய்ப் பழுத்திட்ட பலாச்சு ளைகள்!
பதம்பார்த்துப் பறித்திட்ட பழக்கு லைகள்!
மிக்குயர்ந்து மணங்கமழும் பூங்கொத் துக்கள்!
மேலான ஒளியுமிழும் நன்முத் துக்கள்!
இக்காலக் கேடுகளைக் கேலி செய்யும்
எழில்வான விண்மீன்கள் என்பேன் உண்மை!

சுவைஎட்டும் கலந்திருக்கும் கதம்பக் கூட்டு
சுப்புரத்னம் கற்பனையில் கனிந்த பாட்டு!
சுவைக்குதவாப் புராணஇதி காசங் கட்குக்
கைலாகு கொடுப்பவர்க்குக் கசக்கும் பாட்டு!
துவைத்தெடுத்தே அழுக்குகளை நீக்கு தல்போல்
துர்நாற்றச் சமூகத்தை வெளுக்கும் பாட்டு!
சுவையென்ருல் சுவையென்றே சொல்ல வைக்கும்
சொக்கவைக்கும் பாவேந்தர் வெல்லப் பாட்டு!

வில்லைவைத்து விளையாடும் வேடர் உண்டு
விழியைவைத்து விளையாடும் மங்கை உண்டு
கல்லைவைத்து விளையாடும் பொல்லார் உண்டு
கருத்தைவைத்து விளையாடும் நல்லார் உண்டு
சொல்லைவைத்து விளையாடும் கலையில் வல்லோன்
சுப்புரத்தி னம்தவிர யாரே உண்டு?
சொல்லுந்தி றன் எவனுக்(கு) உண்டு? அன்னேன்
சுவைப்பாட்டுக்(கு) எவன்பாட்(டு) ஈடே ஆகும்?

காற்றாடி விடுவதிலா உவகை? வெற்றுக்
கவர்ச்சிக்கு மயங்குதலா உவகை? பொய்யைச்
சாற்றியுமே திரிவதிலா உவகை? நட்பைச்
சதிசெய்து கெடுப்பதிலா உவகை? தீமைச்
சேற்றினிலே புரள்வதிலா உவகை? நல்லோர்
சேவையினை இகழ்வதிலா உவகை? இல்லை!
வேற்றாரும் வியக்குமாறு தமிழாம் தாயின்
வியன்புகழைக் காப்பதில்தான் உவகை உண்டு!

அக்காலம் தமிழ்போற்றல் உவகை; நல்ல
அறங்காத்தல் மறங்காத்தல் உவகை என்பேன்!
இக்காலம் சிலருக்கோ உவகை; அந்தோ
எப்போதும் தமிழ்தூற்றல்; இனம்ப ழித்தல்!
முக்கனிபோல் சர்க்கரைபோல் இனிக்கும் நல்ல
முத்தமிழைக் காப்பதிலே 'உவகை' கொண்டு
எக்காலும் உழைத்தவரே 'சுப்பு ரத்னம்'
இவர்பாட்டில் உவகைக்கோ பஞ்சம் இல்லை!

சஞ்சீவி பர்வதத்தின் சாரல் தன்னில்
சரஞ்சரமாய்த் தான் உவகைச் சுவையும்
உண்டே!
அஞ்சாத சிங்கமெனக் குப்பன் தானும்
அழகுமகள் வஞ்சியுடன் மலைமீ தேறிக்
கொஞ்சுவதும் கெஞ்சுவதும் கொஞ்ச மாமோ?
கொள்ளைகொள்ளை யாய்உவகை துள்ளு
தன்றோ?
வஞ்சியவள் வாய்முத்தம் ஒன்றிரண்டா?
வாய்நனைத்துக் கொள்ளுகின்றோம் அன்றோ
நாமும்?

பில்கணீயம் தான்புரட்சிக் கவியே யாகிப்
பேருவகைப் பெட்டகமாய்த் திகழு தன்றோ?
பல்வகையில் வெண்ணிலாவை உதாரன் பார்த்துப்
பாராட்டும் போதடையும் உவகை என்னே!
நல்உதாரன் அமுதவல்லி காதல் வாழ்வு
நாட்டுக்கே நன்மையாக முடிந்த தன்றோ?
வல்லியவள் வேல்விழியை வீசி; முத்தம்
விளைத்தபோது தரும் உவகை கொஞ்ச மாமோ?

குடும்பவிளக் கேஉவகைக் கூட்டாம்; இன்பக்
கொள்கலனும்; மகிழ்ச்சிப்பண் எழுப்பும்
யாழாம்!
இடும்பையில்லை; காதலன்புக்(கு) அளவோ இல்லை!
எப்போதும் யாரிடத்தும் உவகை ஒன்றே
குடியிருக்கக் காண்கின்றோம் அவ்வி ளக்கில்!
கோலூன்றும் முதியோரின் காதல் கூட
வடுமாங்காய் கோடையிலே சுவைப்ப தைப்போல்
வற்றாது சுவைக்கின்ற பான்மை என்னே!

எதிர்பாரா முத்தமெனும் காவி யத்தில்
இதழ் எழுப்பும் 'இச்' சொலிக்கோ குறைவே
இல்லை!
அதிகாலைப் போதில் பொன் முடியைக் கண்டே
ஆனந்தம் மிகக்கொண்டாள் கோதை நல்லாள்!
குதித்தாடும் கன்றேங்க பசுவின் காம்பில்
கோதையின் தாய் பால்கறந்து முடிக்க; அங்கே
இதழ்க் கடையில் 'இச்' சென்று முடித்தான் முத்தம்!
இருவர் அவர் உவகைக்கோ எல்லை இல்லை!

தாமரைபூத் திருக்கின்ற குளத்தில் வண்ணத்
தாமரையாம் முகந்தோன்ற குளிக்கும் அந்தக்
கோமளவல் லியைக்கண்ட குப்பன் தானும்
கொள்ளைகொ டுத்தனன்தன் உள்ளந் தன்னை!
காமனையே கொல்லுகின்ற நினைப்பில் குப்பன்
காத்திருக்கின் றான்; அந்தக் கன்னி வந்தாள்!
மாமரத்துத் தோப்பினிலே கொள்ளை இன்பம்
மாங்கனியாய்ச் சுவைநல்கும் உவகை என்னே!

சுவைஒன்ப தையும்வைத்து கதைப்பாட் டொன்று
சுவையாக யாத்துள்ள சுப்பு ரத்னம்,
உவகைக்கு முதலிடத்தை அளித்தே உள்ளார்!
உங்கள்முன் தான் அதற்(கு) 'இறுதி' என்பேன்!
உவகைக்கே இறுதிஇப் புதுவை என்றே
உள்ளர்த்தம் கொள்ளாதீர்! பாவேந் தர்தம்
உவகைக்கே வித்தான புதுவை யன்றோ?
உங்கட்கெல் லாம் வணக்கம்! இதய நன்றி!!

**(இக் கவிதையின் சில பகுதிகள் 30—4—74 அன்று இரவு 10 மணியளவில் பாண்டிச்சேரி வானொலியில் ஒலிப்பரப்பானது.)**

# அவன் கேட்பது வாழ்வு

**அவன், படைப்புத் தொழிலில் வல்லவன்!**

**அவன், பிறர் நலம் நாடிடும் நல்லவன்!**

**அவன், பரிவும் கனிவும் ததும்பும் உள்ளம் உள்ளவன்!**

**அவன், பகட்டும் பசப்பும் அறியாதவன்!**

**அவன் சூதும் சூழ்ச்சியும் தெரியாதவன்!**

**அவன், தான் செய்யும் பணியின் கணக்குப் பார்க்காதவன்!**

அவன், இல்லையேல், அரசு இல்லை! வெற்றி முரசு இல்லை! அணி பணி இல்லை! அமைதி இல்லை! இல்லம், இன்பம், இல்லை! அவன், அவனிக்கே ஓர் அச்சாணி!

அவன், கரம் பட்டதாலேயே செழுமை காண்கின்றோம்!

அவன், வியர்வை கொட்டியதாலேயே மண், மணம் பெறுகிறது!

அவன், அழித்த காடுகள் பலப் பல!

அவன், அமைத்த பாதைகள் பலப் பல!

அவன், வெட்டிய திருக்குளம் பலப்பல!

அவன் கட்டியகோட்டைகள் பலப்பல!

அவன், ஆக்கித் தந்ததே அனைத்துப் பொருள்களும்!

**அவன், படைப்புத் தொழிலில் வல்லவன்**

**அவன்** பழிபாவத்துக்கு அஞ்சாதாரிடம் **பகடையானுன்**

அவன், உழைக்கிறான்; உருக்குலைந்து போகிறான்!

அவன், உழுகிறான்; மற்றவர் உல்லாசபுரியில் உலவுகிறார்கள்!

அவன் அறுத்துக்குவிக்கிறான்; மற்றவர் அள்ளிச் செல்கிறார்கள்!

அவன், ஏழ்மையில் உழல்கிறான்; எல்லாச் செல்வத்தையும் ஆக்கி அளித்துவிட்டு!

அவன் ஆடை அணி தேடிடவில்லை; ஆடம்பரம் நாடிடவில்லை!

அவன், மேனி அழகு கூடிட, புனைவனவும் பூசுவனவும் தேடிடவில்லை!

அவன், உழைக்கிறான், உழைக்கிறான், உழைக்கத்தானே பிறந்தோம் என்ற உணர்வுடன்,

அவன், தன்னைச்சுற்றி சீமானும் பூமானும் உலவிடக் காண்கிறான்; இவர்கள் இந்நிலை பெற்றது எதனால் என்று கேட்டிட முனைகின்றான் இல்லை!

அவன், கண் எதிரே மணி மாடங்கள் தெரிகின்றன; நமக்கு மண் குடிசைதானா? என்று கேட்டிடத் தோன்றவில்லை!

அவன், உழைப்பால் உலகை வாழவைத்திடும் உத்தமன்!

அவன், உழவன்! அவன், பாட்டாளி! அவன், ஏழை!

அந்த ஏழைக்கு ஒரு விழா எடுக்கிறார்கள்! உழவனுக்கு என்று ஒரு திருநாள் நடத்துகிறார்கள்! உழவர் திருநாள்! பொங்கற் புதுநாள்! — என்றெல்லாம் பெயரிடுகிறார்கள்! போற்றுகிறார்கள். நாட்டைப் பொன் கொழிக்கும், பொலிவு பூத்த இடமாக ஆக்கி அளித்ததற்காகப் பெருமைப் படுத்துகிறார்கள். அவன், புகழ் பாடுகின்றனர் கவிஞர்கள்! அவன், இயல்புகளைப் போற்றுகின்றனர் நல்லோர்! அவனை, அரசுகூட வாழ்த்திட முன்வருகிறது! அவன், விழிகளை அகலத் திறந்து பார்க்கிறான், வியப்புடன்! புறக்கணிக்கப்பட்டுக் கிடந்தவனை நோக்கி, புகழ் மாலையுடன் பலர் ஓடோடி வந்திடக் கண்டு, ஈதென்ன புதுமை! இதற்கு என்ன காரணம்? என்னவோ இதன் விளைவு? என்றெல்லாம் அவன் தன்னைத்தானே கேட்டுக்கொள்கிறான்.

அவன் ஏழை—ஆனால் இன்று அவனைப் புறக்கணிக்க அஞ்சுகிறார்கள்! அவன் சிந்திக்கத் தொடங்கிவிட்டானே, சிறுமைப்படுத்தப்படுகிறோம் என்ற உணர்வு கொண்டிடின் சீற்றம் பொங்கிடுமே, அஃது தடுத்திட முடியாத அழிவையன்றோ மூட்டிடும், போகபுரியைத் தகர்த்திடுமே என்று அஞ்சத் தொடங்கி விட்ட கனதனவான்கள், அவனை மயக்கிட, இனிப்புப் பேச்சு தந்திட முனைகின்றனர். அவன் ஏழை; வெள்ளை உள்ளம் கொண்டவன்; எனவே எளிதிலே அவனை மயக்கிவிடலாம் என்று எண்ணுகின்றனர்!

எல்லாம் உன்னால்தானே!—என்று புகழ்ந்தால், அவன் உச்சி குளிர்ந்துவிடும் என்று எண்ணுகின்றனர்!

**பேரறிஞர் அண்ணா**

உன்னாலன்றோ உலகு என்று உரைத்ததும் அவன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளும்; அவன் தனக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளை மறந்திடுவான்; புதிய உற்சாகத்துடன் உழைத்திடுவான்; புதுப்புது செல்வத்தை ஆக்கித் தந்திடுவான் என்று எண்ணுகின்றனர். அவன் ஏழை! எத்தர்கள் அவனை ஏமாளி என்றே தீர்மானித்து விட்டுள்ளனர்!

கந்தனு! கிடாமாடும் அவனும் ஒன்றுதானே!— என்று கேலி பேசி வந்த கனவான், "உழைப்பின் பெருமை" பற்றி அவனிடம் பேசுகிறான்!! உலகம் உய்வதே உழைப்பவனுல்தான் என்று பாராட்டுகிறான். ஏழை, திகைக்கிறான்; இதென்ன என்றும் கேளாத பேச்சாக இருக்கிறதே என்று!

தமிழக அரசு, பொங்கற் புதுநாளை, உழவர் திருநாளாகக் கொண்டாட ஏற்பாடு செய்வது பொதுவாக ஏற்பட்டுள்ள புதிய போக்கின் ஒரு பகுதியே யாகும். உழைப்போரின் உள்ளம் எரிமலையாகி வெடித்திடாதபடி தடுத்திட, தடவிக் கொடுத்திடும் ஓர் முயற்சி! பாட்டாளிகள் உள்ளத்திலே பகை உணர்ச்சி மூண்டெழுகிறது என்று கண்டு கொண்டவர்கள், பாகு மொழி பேசி மயக்கிட எடுத்துக் கொள்ளும் முயற்சி! அவன் ஏழை! ஆனுல் அவன் எங்கும் இருக்கிறான்!! ஆகவே அவனைப் பகைத்தொழிக்க முடியாது; மயக்கிட முடியும் என்று எண்ணுகின்றனர், அவன் உழைப்பை உண்டு பெருத்த திட்ட உல்லாசபுரியினர்.

அவனை மிதித்துத் துவைத்துவந்த நாள் போய், மதித்து மகிழச் செய்திட முயற்சி மேற்கொள்ளப் படும் நாள் வந்திருப்பது, வரவேற்கத்தக்க ஒரு கட்டம்; அஃது போலிகள் நடாத்திடும் நாடகமாக இருந்திடும் நிலையிலேயும், ஏழையைப் புறக்கணித்தபடி இனி இருந்திட முடியாது என்ற எண்ணம் இடம் பெற்றுவிட்டதனை இந்தக் கட்டம் தெளிவாக்கிக் காட்டுகிறது.

இந்தக் கட்டம், இறுதிக் கட்டமல்ல! ஆனுல் இந்தக் கட்டம், காணவே நீண்ட பயணம் நடாத்த வேண்டி இருந்தது; இன்னல் பல ஏற்கவேண்டி வந்தது.

அவன் ஏழை! ஆமாம்! வேறே எப்படி இருக்க முடியும்! என்ன தெரியும் அவனுக்கு! உழைக்கத் தெரியும் மாடுபோல! சுமக்கத் தெரியும்; கல்லைப் பிளக்கத் தெரியும்; கட்டை வெட்டத் தெரியும்; குப்பை கூட்டத் தெரியும்; வேறென்ன தெரியும்! அறிவின் துணைகொண்டு செய்திடவேண்டிய பல செயல்கள் உள்ளன; அவன் என்ன கண்டான் அவைபற்றி! அவனுக்கு ஏது அதற்கான தெளிவு— பயிற்சி! அவன் பாவம், ஏழை, என்று பரிதாபம் கலந்த ஏளனப் பேச்சு நடத்திவந்தனர் சீமான்கள்! நளினிகள் அந்தப் பேச்சு கேட்டு 'கலகல'வெனச் சிரித்தனர்!

அவன் ஏழை! உழைக்கிறான்; அவனும் பிழைத்திருக்கவேண்டாமா! அவன் ஏழை, ஆனுலும் நமது உடைமை அல்லவா? அவன் உயிருடன், உடல் வலிவுடன் இருந்தால்தான், உழைக்க முடியும்! அதனுல் அவன் வாழ வழி செய்து தரவேண்டியது நமது கடமை!! அவன் உடல் நலம் கெடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டியதும் நமது கடமை! அவன் ஒரு நாலு நாள் படுத்துவிட்டாலோ, அல்லது ஒரே அடியாகக் கண்ணை மூடிவிட்டாலோ, யாருக்கு நட்டம்? நமக்குத்தானே! ஆகவே அவனைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை!!—இந்தவிதமான 'வியாபார'ப் போக்கிலே பேசி வந்த கட்டம் பிறகு!

இப்போது வந்துள்ள கட்டம் அவன் உழைக்கிறான், ஆனுல் இப்போது உண்மையையும் உணரத் தலைப்பட்டு விட்டான்; நம்மாலன்றோ உலகு என்றே பேசுகிறான், மெல்லிய குரலில்! நான் இல்லையேல், இங்கு வேறு எதுவும் இல்லை என்று முணு முணுக்கிறான். ஆகவே அவனை இனியும் புறக்கணிக்கக் கூடாது, அவன் பகையைத் தேடிக் கொள்ளக் கூடாது, பரப்பிட வேண்டும், மயக்கிட வேண்டும் என்ற திட்டம் போட்டிட வேண்டியதாகி விட்டது.

உழைப்பவனே உத்தமன்! உழைப்பே செல்வம்! உழைப்புக்கே எல்லாப் பெருமையும்! உலகம் இயங்குவதே உழைப்பினுல்தான்!—என்ற திருப்புகழ் பாடுகின்றனர்.

நமது பெருமை இத்தகையதா! நாம் உழைத்திடுவது கண்டு நம்மை இவ்வளவு உயர்வாகப் பேசுகின்றனரா? மேலும் உழைத்திடின், மேலும் போற்றுவர்! வாழ்த்துவர்!—என்று பாட்டாளி எண்ணிக்கொள்வான்; மனதிலே எழும்பிய குமுறலும் அடங்கிப்போகும்; கணக்குப் பார்க்கமாட்டான்; கணக்கு கேட்கவும் மாட்டான்; காலத்தை நமதாக்கிக் கொள்வோம், இரண்டொரு கற்கண்டுத் துண்டுகளை வீசிவிட்டு!—என்று எண்ணி, தன்னலக்காரர் திட்டம் தீட்டிவிட்டுள்ளனர், அந்தக் கட்டம் இது!

கேள்வி ஏதும் கேட்காதிருந்து வந்த ஏழை, எப்போது, எதனுல் கேள்வி கேட்கத் தொடங்கினுன்? ஓயாது உழைத்தும், வாழ முடியாத நிலைபெற்று, வாட்டப்பட்டபோது, எண்ணம் மனதினைக் கிள்ளத் தொடங்கிற்று. பசுமையைத் தந்தவன், தன் வாழ்க்கை வரண்டுபோகக் கண்டபோது, உலகுக்குப் பசுமை தேடித் தந்திடும் நம்மாலே நமது வாழ்விலே வறட்சி ஏற்பட ஒட்டாது தடுத்திட முடியாது போய்விட்ட காரணம் என்ன? என்று கேட்கத் தொடங்கினுன். அதன் தொடர்பாக, அடுக்கடுக்கான கேள்விகள் கிளம்பின! அதிர்ச்சி தரத்தக்க பதில்கள் கிடைத்தன!

கனியின் சுவையை மலரின் மணத்தை, பூங்காற்றின் நேர்த்தியை இசையின் இனிமையை நாம் பெற்று மகிழ்ந்திட முடியவில்லை...ஆனுல்...என்று எண்ணிடலானுன். அவன் மனம் எங்கெங்கோ சென்றது பெருமூச்சு கிளம்பிற்று! ஓர் கடுமை நிரம்பிய பார்வை கண்களிலிருந்து புறப்படலாயிற்று!

உழைப்பே செல்வம்! உழைப்பின் பெருமையே பெருமை!—என்று விழா நடாத்திப் பேசிடின் ஏழை, 'இது போதும்' என்று இருந்துவிடுவானு?

உழைப்பே செல்வம்! ஒப்புக்கொள்கிறார்கள்! ஆனுல் அந்தச் செல்வம் உழைப்பவனிடம் இல்லையே, ஏன்? உழைக்காதவனிடம் போய்க் குவிகிறதே எப்படி என்று எண்ணிடுவான்! அந்த எண்ணம் ஆபத்தான எண்ணம் என்பர் ஆதிக்கக்காரர்கள்!

வந்து தீரவேண்டிய எண்ணம் என்பர் வரலாறு அறிந்தவர்!

அந்த எண்ணத்தைத்தான், மெள்ள மெள்ள ஆனல் நிச்சயமாக, ஏழையை மயக்கிடும் நினைப்புடன் விழா நடத்துவோர் ஊட்டிவிடப் போகின்றனர்; தம்மையும் அறியாமல்.

உழைப்பின் பெருமை பற்றி இத்தனை உருக்கத்துடன் பேசுகின்றனரே, விழா நடாத்துவார்—விவரம் தெரிந்தவர் அல்லரோ அவர்கள்—ஆயின் உழைப்போன் பெற்றுள்ள பெருமை என்ன, இன்று?

பெருமைதரும் இடமா, சமூகத்தில் இருக்கிறது உழைப்போனுக்கு?

பெருமைக்குரிய உழைப்போனுக்கா ஊராளும் மன்றங்களில் இடம் இருக்கிறது?

உழைப்பே பெருமை என்று பேசுபவர், உழைக்கவா முன் வருகின்றனர்! பேசுகின்றனர்!!

உழைப்பின் பெருமையை அவர்கள் உணர்ந்து உரைப்பவரெனில், உழைப்பவன் உருக்குலைந்து கிடக்கிறனே, அவனுக்காக என்ன செய்தனர்?

உடைமையும் உல்லாசமும்! சீமான்களிடம்; உழைப்பு எம்மிடம்! எமக்கென்று அவர்கள் விட்டு வைத்துள்ள ஒரே உடைமை, உழைப்பின் பெருமை என்று பேசுகிறர்களே அந்தப் 'பெருமை' மட்டுந்தானே! நியாயமா இது!—என்று கேட்கவைக்கவே விழா பயன்படும்;—உடனடியாக இல்லையெனினும் மெள்ள மெள்ள.

உழைப்பின் பெருமையை உணர்ந்துள்ள பெரியவர்களே! உழைத்திட வாரீர்!—அந்தப் பெருமையிலே பங்கேற்க வாரீர் என்று ஒருவன், கேலிக் குரலில் அழைப்பு விடுத்திடுவான்!

உழைப்புதானே, ஐயன்மீர்! பெருமை தருவது! அங்ஙனமிருக்க, உண்டு கொழுத்து உருண்டு கிடக்கின்றீரே, பிறர் உடைமையைக் கவர்ந்திட வழிதேடி அலைகின்றீரே!—ஏன்? வந்து உழைத்திடுவீர், பெருமை பெறுவீர்'—என்றொருவன் கேட்டுவிட்டு! புன்னகை உதிர்த்திடுவான்.

உழைப்பின் பெருமைபற்றித்தானே ஐயா! பேசுகிறீர்! உண்மை ஐயா உண்மை! பெருமை நிரப்பத்தான் இருக்கிறது. பட்ட கடனைத் தீர்த்திட வக்கற்று பதுங்கிப் பதுங்கிச் செல்கிறயே, நீயும் ஒரு மனிதனு? என்று பக்கிரி கேட்டான், பத்துப்பேர் எதிரில், பட்டப்பகலில், நடுத்தெருவில்! அந்தப் 'பெருமை'யை நான் பெற்றேன்! உழைத்துத்தான் பெற்றேன் அந்தப் பெருமையை!

வைரம்! வைரம்! அருமையான வைரம்! மணங்கு ஒரு ரூபாய் வாங்கிட முந்துங்கள்! அருமையான வைரம்!!—என்று எங்காவது கூறிடுவாரா இங்கு கூறுகின்றனர்! உழைப்பு! உழைப்பு! பெருமை மிக்கது அருமைமிக்கது! உழைத்திடுவீர்கள்! நாளெல்லாம் உழைத்திடின் நாலணு கூலி! நல்லோரே! வல்லோரோ! உழைத்திடுவீர், பெருமை பெற்றிடுவீர்! நாலணு நாலணு!—என்று அழைக்கின்றனர்!—என்றொருவன் கேலி பேசக் கிளம்புவான்.

உழைப்பின் பெருமை பற்றியும் பேசிவிட்டு, உழைப்போனைத் தாழ்நிலையில், தரித்திர நிலையில் இருந்திடச் செய்வது, முடியாத காரியம்.

உழைப்பவன், நிம்மதியான வாழ்வு, சமூகத்தில் மதிக்கத்தக்க நிலை, பெற்றிட வழி கண்டாலொழிய, பிரச்சினை தீரப்போவதில்லை. அந்த வழி காணும் வரையில் குமுறல் நிற்கப்போவதில்லை, உழைப்பின் பெருமை கேளீர் என்று பேசி விடுவதால் பிரச்சினை பட்டுப்போய் விடப்போவதில்லை.

உழைப்பே செல்வம்! உண்மை! அதனை ஒப்புக் கொண்டாகவேண்டிய கட்டம் பிறந்தது உண்மைக்குக் கிடைத்த ஒரு வெற்றி என்றே கூறலாம். ஆனல் உழைப்பால் கிடைக்கும் செல்வம், சமூகத்தில் ஒரு சீராகப் பரவிடவேண்டும். உழைப்போருக்கு உரியது கிடைத்திடவேண்டும்! அந்த நீதி நிலைநாட்டப்படுகிற வரையில், உழைப்பே செல்வம் என்று பேசிப் பயனும் விளையப் போவதில்லை.

உழைப்பே செல்வம்! உண்மை! அந்தச் செல்வம், சமூகம் முழுவதையும் காத்திடத்தக்க அளவு உள்ளது! அதிலே பெரும் பகுதியை, முடக்கி விடுவதால், மடக்கிவிடுவதால், அந்தச் செல்வம் சமூகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் பயன்படும் நிலை கெடுகிறது; குறிப்பாக உழைப்போருக்கு உரியது போய்ச் சேருவதில்லை; சேர்ந்திடாததால், அவர்களின் 'உழைக்கும்திறன்' குலைந்து போகிறது. நலிவு மேலிடுகிறது; நலிவு மேலிடும்போது நினைப்பே கெடுகிறது. யாருக்காக உழைக்கிறேம்? எதற்காக உழைக்கிறேம்? என்ற கேள்வி மனதைக் குடைகிறது; உழைக்கும் நினைப்பையே மாய்த்துவிடுகிறது; அஃது மாய்ந்துவிடுவதால், செல்வ உற்பத்தி குறைகிறது; குறைவதால் சமூகம் முழுவதும் வறுமையின் பிடியில் சிக்கிக் கொள்கிறது.

உழைப்பவனை வஞ்சித்து ஒரு சிலர் செல்வத்தை முடக்கிக் கொள்வது, சமூகத்தையே நாளாவட்டத்தில் பாழக்கிவிடுகிறது; அதனுல்தான்' அது சமூக விரோதச் செயலாகிறது.

அத்தகைய சமூக விரோதிகளும், அவர்களுக்கு உடந்தையாக இருப்பதற்கான ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளவர்களும், ஒருநாள் கூடி, உழவர் திருநாள்-உழைப்போரின் திருநாள் என்று கொண்டாடுவது, ஏமாந்தவனைச் சேற்றிலே தள்ளிவிட்டு, அவன் மீது சிறிதளவு பன்னீர் தெளிப்பது போன்றதாகும்; புண்ணின்மீது புனுகு பூசுவது போன்றதாகும்; கண்ணைக் குத்திவிட்டு கைக்குக் காப்பு போடுவது போன்றதாகும், குன்மம் போக்க மருந்து தராமல், அவன் முன் குழல் ஊதி, இனிமையைப் பெறு என்று கூறுவது போன்றதாகும்.

உழைப்பவன் இன்று கேட்பது நீதி! உழைப்பின் பெருமை பற்றிய சிந்து' அல்ல! உழைப்பவன் இன்று கேட்பது வாழ்வும் பொருளற்ற புகழுரை அல்ல.

அவன் ஏழை! அவன் வாழ விரும்புகிறன்!
அவன் ஏழை! அவன் நீதி கேட்கிறன்!

அவன் ஏழை! உண்மையை உணர்ந்து கொண்டான்!

அவன் ஏழை! வாழ்வுக்காகப் போராடுகிறன்

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதி யில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ... | ரூ. 5 | ரூ. 355 |
| | | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

சிறு சேமிப்புத் துறை,
**தமிழ்நாடு அரசு.**


அவன் ஏழை! உரிமைகுரல் எழுப்புகிறான்!

அவன் ஏழை! ஆனால் அவன் உழைப்பே, செல்வம் என்பதை அறிந்துகொண்டு விட்டான்.

அவன் ஏழை! விழித்துக்கொண்டு விட்டான்;

அவன் கேட்பது வாழ்வு! ஏமாற்றும் விழா அல்ல!

உரிமைத் திருநாள் காண விழைகிறான், ஊராள்வோர், உழவர் திருநாள் நடத்தி அவனை மயக்கிட முடியாது.

உண்மையான உழவர் திருநாள்; உழுபவனுக்கு நிலம் கிடைத்திடும் நாளே!

நேர்மையான உழவர் திருநாள்; நெற்றிவியர்வை நிலத்தில் சொட்டச் சொட்டப் பாடுபடும் உழவன் வாழ்வில் நிம்மதி ஏற்படும் நாளேயாகும்!

நாணயமான உழவர் திருநாள், அவன் சோலைவனத்தைத் தன் உழைப்பால் தந்து விட்டு, அதிலே சொகுசுச் சீமாட்டிகளும் அவர்களிடம் சொக்கிடும் சீமான்களும் உலவிட, தனக்கென்று அமைகிற வாழ்வு பாலைவனமாக இருந்திடும் கொடுமை நீக்கப்படும் நாளேயாகும்.

இந்நாளே, திருநாள்; பொன்னாள்; உழைப்போர் உண்மையான பெருமையினைப் பெற்றிடும் நன்னாள்.

அந்நாளைக் கண்டிடவே கழகம் விழைகிறது.

அதற்காகப் பாடுபடும் ஆற்றலைப் பெற்றிடவே பணியாற்றி வருகிறது.

அதற்காகவன செய்திடவே மக்களின் ஆணையை எதிர்பார்த்து நிற்கிறது.

★

பேரறிஞர் அண்ணா அவர்கள் 8—1—67 காஞ்சி பொங்கல் மலருக்காக "அவன் கேட்பது வாழ்வு" என்ற தலைப்பில் இக்கட்டுரையை தீட்டியுள்ளார். அப்போது ஆட்சிசெய்த காங்கிரஸ்காரர்கள் பொங்கற் புதுநாளை, உழவர் திருநாளாகக் கொண்டாட ஏற்பாடு செய்தனரே அன்றி அவனுடைய வாழ்வைப் பற்றி சிந்திக்கவில்லை என்பதை இக் கட்டுரையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

# கற்பு!

அறைக் கதவை மூடிக் கொண்டு கட்டிலில் குப்புறப் படுத்தவாறே வசந்தா கேவிக் கேவி அழுதுகொண்டிருந்தாள். கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிந்து கொண்டிருந்தது. துக்கம் தொண்டையை அடைத்தது. அந்தக் கொடூரமான வார்த்தையை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. "தன் மனைவியிடம் இப்படி வாய்விட்டுக் கூற அவருக்கு எப்படித்தான் மனம் துணிந்தது?" என்று நினைக்கும்போது, அவளின் மென்மையான இதயமே வெடித்துவிடும் போலிருந்தது.

'எனக்கென்ன வயதா போய் விட்டது? இன்னும் சில காலம் காத்திருந்தால் பலன் கிடைக்காமலா போய்விடும்!''

"ஆனால்...யாருமே சொல்லக் கூசுகின்ற...அதுவும் தன் மனைவியிடம் சொல்லக் கூடாத அந்த வார்த்தையை எவ்வளவு எளிதாகக் கூறிவிட்டார்! ஆண்களைப் போன்றவர்களா பெண்கள்? அழகான பெண்ணைக் கண்டவுடன், மலருக்கு மலர் தாவுகின்ற வண்டைப் போல சபலம் கொண்டு அலைபவர்கள் ஆண்கள் தான். ஆனால், கட்டிய கணவனுக்கு துரோகம் நினைக்காமல் 'கல்லானாலும் கணவன்—புல்லானாலும் புருஷன்' என்று எண்ணிக் கொண்டு கணவனுக்கு தொண்டு செய்வதையே பெரும் பேறாகக் கருதுபவள் அல்லவா பெண்?''

"என்ன செய்வது? தன் பெற்றோர்களின் கண்டிப்புக்கும், அவரின் தன்னம்பிக்கையின்மைக்கும் பலியாகி சொல்லக் கூடாத வார்த்தையை சொல்லிவிட்டார். கணவன் வாயாலேயே களங்கப் படும் வார்த்தையைக் கேட்டவுடன் நான் உயிருடன் இருக்க வேண்டுமா? கூடாது!

கற்பை உயிராக மதிக்கும் எந்தக் குடும்பப் பெண்ணும் என் முடிவை வரவேற்பார்கள். ஆண்டவனே! என்னை மன்னித்துவிடு!'

மனப் போராட்டத்தில் தத்தளித்த வசந்தா இறுதியில் சாவது என்ற முடிவுக்கு வந்து விட்டாள். அதன் பலன்... தூக்கிலே தொங்கிவிட்டாள்.

ஃ ஃ ஃ

செல்வத்திலும் செல்வாக்கிலும் அந்த ஊரிலேயே இராமநாதனின் குடும்பம் சிறந்து விளங்கியது. தன் ஒரே மகனை அழகப்பனுக்கு—பெரிய இடத்திலே தனது தகுதிக்குத் தகுந்த இடத்திலேயே திருமணத்தை முடித்துவைத்தார். அவள் பெயர்தான் வசந்தா. வசந்தா அழகிலும்—அறிவிலும்—குடும்பத்திற்கேற்ற குணத்திலும் சிறந்த பெண்ணாகவே இருந்தாள்.

மணம் முடிந்து கணவனும் மனைவியும் நல்ல ஒற்றுமையுடன் தான் இருந்தனர். இளமைக் காலத்தை இன்பமாகவே கழித்தார்கள். பணம் இருந்தால் இன்பத்துக்கென்ன குறைச்சல்? ஆனால், அந்தப் பணத்தாலும் கொடுக்க முடியாத இன்பம் ஒன்று இருக்கிறது.

அதுதான் 'மழலை இன்பம்'. கோடீஸ்வரன் முதல் கோவணாண்டி வரையிலும் ஏங்கித் தவிக்கக்கூடிய இன்பம் மழலை இன்பம் ஒன்றுதானே!

திருமணம் முடிந்து பத்தாண்டுகள் ஆகியும் இதுவரை அந்தக் குடும்பத்தின் பேர் சொல்ல ஒரு 'பூ'கூட மலரவில்லை. அதை நினைத்து, இராமநாதனும் அவர் மனைவியும் மனவேதனை அடையாத நாளே இல்லை. எத்தனை செல்வத்தில் திளைத்திருந்தாலும் வயசான காலத்தில் பேரக் குழந்தைகளுடன் கொஞ்சி மகிழத்தானே யாருக்கும் ஆசை மிகுதியாயிருக்கும். அவர்கள் துர்ப்பாக்கியம் இதுவரை அவர்களின் ஆசை நிறைவு பெறவில்லை.

ஆனால், அழகப்பனும் வசந்தாவும் அதுபற்றிய கவலையே இல்லாமல் இளமையை இன்பமாகக் கழித்துக் கொண்டிருந்தனர். குழந்தையைப் பற்றிய கவலை அவர்களுக்கு இல்லாதிருந்தமைக்குக் காரணம்—வயது அதிகம் ஆகாமையும், குழந்தை பிறந்துவிட்டால் விருப்பப்படி நடந்து கொள்ள முடியாதே என்ற எண்ணம் மேலோங்கியிருந்ததும் தான்.

"தங்களுடைய மருமகளுக்கு இனிமேலா குழந்தை பிறக்கப் போகிறது; அப்படியே இன்னும் சில வருஷங் கழித்துப் பிறந்தால் அதைக்கண்டு மகிழ நாம் இருக்க வேண்டுமே?" என்று எண்ணிய பெரியவர்கள் இருவரும் தம் மகனுக்கு இரண்டாந்தாரம் கட்டி வைக்க முடிவு செய்தனர்.

குறிஞ்சில்தாசன்

ஒருநாள் பகல் உணவை முடித்துக் கொண்ட இராமநாதன் வெளியே சென்றிருந்த தன் மகனின் வருகையை எதிர்பார்த்தவாறு, ஈஸிசேரில் சாய்ந்து கொண்டிருந்தார். அப்போது, அழகப்பனும் அவர் எதிர்பார்த்தவாறு வந்து சேர்ந்தான்.

அவனை அழைத்து, தன் உள்ளத்திலே அடக்கி வைத்திருந்த முடிவை வெளியிட்டார்.

"அழகப்பா! எனக்கும் உன் தாயாருக்கும் வயதாகிவிட்டது. நாங்கள் சாவதற்குள் இந்த வீட்டின் பெயர் சொல்ல ஒரு பேரக் குழந்தையைக் கண்டு களித்துவிடலாம் என்று பத்தாண்டுக் காலமாகக் காத்திருந்தும் இதுவரை உன் மனைவிக்கு ஒரு குழந்தைகூட பிறக்கவில்லை; அதனாலே, உனக்கு மறுதாரம் கட்டிவைக்கலாம் என்று இருக்கிறோம். உன் விருப்பம் என்னப்பா?" என்றார்.

அழகப்பனுக்கு இதைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது. அவன் தன்மனைவிமேல் உயிரையே வைத்திருந்தான். அவளுக்குப் போட்டியாக இன்னொருத்தி அந்த வீட்டிற்குள் வருவது அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும், அந்த நேரத்தில் தன் தந்தைக்கு ஆறுதல் சொல்ல வேண்டியவனாகி விட்டான்.

"அப்பா! எனக்காக இல்லாவிட்டாலும் உங்களுக்காக நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்னும் ஒரு வருஷத்தில் வசந்தாவுக்குக் குழந்தை பிறக்காவிட்டால் நீங்கள் சொன்னபடி திருமணம் செய்துகொள்கிறேன். அதுவரை பொறுத்துக்கொள்ளுங்கள்" என்று ஏதோ ஓர் அசட்டுத் தைரியத்தில் கூறிவிட்டு வெளியே சென்றுவிட்டான்.

இந்த வார்த்தையைக் கேட்ட பெரியவரும் ஏதோ ஓர் திருப்தியில் பேசாது இருந்தார்.

ஃ ஃ ஃ

அன்று இரவு படுக்கைக்குச் சென்ற அழகப்பனுக்குத் தூக்கமே வரவில்லை. தன் தந்தை கூறிய வார்த்தைகள் அவன் கண்முன்னாலேயே நின்றன. வசந்தாவுக்குத் துரோகம் செய்ய அவன் மனம் சிறிதும் இடம் கொடுக்கவில்லை. அந்த வார்த்தைகளை அவனால் மறக்கவும் முடியவில்லை. 'அதை மனைவியிடம் கூறலாமென்றாலோ, அதனால் ஏதாவது விபரீதம் நடந்துவிடுமோ' என்ற அச்சம் வேறு அவனை உறுத்தியது.

அவன் நெஞ்சத்தில் அவள் ஒருத்திக்குத்தான் இடம். இதுவரை, வேறு பெண்ணை அவன் எந்த நேரத்திலும்—எந்தச் சூழ்நிலையிலும் ஏறெடுத்துப் பார்த்ததே கிடையாது.

அவளும், தன் கணவனே தெய்வமென்று எண்ணி இதுவரை அவன் மனம் நோகாமல் தான் நடந்து வந்திருக்கிறாள்.

அப்படிப்பட்டவளை அவனால் எப்படி ஒதுக்கமுடியும்.

"குழந்தை பிறக்காதது—அவளால் மட்டும்தான் என்று எப்படிக் கூறமுடியும்? என்னாலும் இருக்கலாம் அல்லவா?" என்று எண்ணிய அழகப்பன்—தன் தந்தை கூறியதை அவளிடம் கூறிவிட எண்ணி அவளை எழுப்பினான்.

அயர்ந்து தூங்கிய வசந்தா உடம்பை நெளித்தவாறே எழுந்து உட்கார்ந்து கணவனை நோக்கினாள்.

'வசந்தா! நமக்குத் திருமணமாகிப் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், இதுவரை உனக்கு ஒரு குழந்தைகூடப் பிறக்கவில்லையே என்ற ஏக்கத்தில் என் பெற்றோர்கள் என்னை மறுதாரம் கட்டிக்கொள்ளச் சொல்கிறார்கள்.'

இதைக் கேட்ட அவளின் உடல் நடுங்கியது; உள்ளம் துடித்தது. அவசரமாக, 'நீங்கள் என்ன சொன்னீர்கள்?' என்று படபடப்போடு கேட்டாள்.

'என் இதயத்தில் உனக்கன்றி வேறு ஒருத்திக்கு இடமில்லை. ஆனால், இன்னும் ஒரு வருஷத்தில் உனக்குக் குழந்தை பிறக்கவில்லையென்றால் அடுத்த கல்யாணம் செய்துக் கொள்கிறேன்' என்று—ஆறுதலுக்காக சொல்லி வைத்தேன்; அதனாலே...

அதனாலே...?

'அதனாலே... வசந்தா! நான் சொல்வதை தவறாக எண்ணாமல் கேள். உன்னைப் பிரியக்கூடாதே என்ற தணியாத பாச வெறியாலே சொல்கிறேன். இனி என்னால் உனக்குக் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. ஆகவே, நீ...நம்வீட்டு சமையல்காரனோடு உறவு கொண்டு ஒரு குழந்தையைப் பெற்றுக் கொடுத்து விடு' என்று தயங்கிக் கொண்டே கூறிய அழகப்பன் அழுதே விட்டான்.

ஆனால், பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த வசந்தாவின் தலை கிறுகிறுத்தது. 'கற்பிழந்தவள்' என்ற வெறும் வார்த்தையையே கணவன் வாயால் கேட்கக் கூசுகின்ற எந்தப் பெண்ணும்—அவன் வாயாலேயே 'கற்பை இழ' என்று சொல்வதை எப்படிக் கேட்டுக் கொண்டு உயிர் வாழ முடியும்?

அந்த வார்த்தையைக் கேட்ட வசந்தா அப்போதே பாதி செத்து விட்டாள்.

அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்று எதிர்பார்த்த அழகப்பனுக்குப் பதில் சொல்லாமல், எழுந்து சென்ற வசந்தா அடுத்த அறையில்போய் கதவை மூடிக்கொண்டாள்.

என்ன செய்வது என்று புரியாத அழகப்பன் தன் நிலையை எண்ணிக் கண்ணீர் வடித்தவாறே படுத்தவன் உறங்கி விட்டான்.

ஆனால், வசந்தா உறங்கவில்லை' மனப்போராட்டத்திலே தத்தளித்தாள். கற்பை இழப்பதா அல்லது கணவனுக்கு மறுதாரம் கட்டிவைப்பதா இரண்டு கேள்வியிலும் சிக்கித் தத்தளித்தாள். ஆனால், இறுதியில் கற்பை இழக்கத் துணியாமல், 'கணவன் நன்றாக வாழட்டும்' என்ற எண்ணத்திலேயே தற்கொலை செய்துக் கொண்டாள்.

காலையில் அழகப்பன் எழுந்த பின்பும் வசந்தாவின் அறை திறக்கப்படாததால் கதவு உடைக்கப்பட்டது. அங்கே கண்ட காட்சி-அழகப்பனை மயங்கி விழச் செய்தது.

# அண்ணு பிள்ளைத் தமிழ்

கவிஞர் தமிழ்ச்சுரபி

## 2 செங்கீரைப் பருவம்

### 1

செங்கரும்பை யிடைச்சுற்றிச் செந்நெல்லைக்
திருமஞ்சள் பூசி பச்சைத் [கச்சணிந்து
திலகமிட்டுப் பூமுடித்து கைவீசி நிற்கின்ற
செழுவயல்சூழ் கச்சி யென்னும்

செங்கதிரோன் எழுமுன்னே தொழுதெழுந்து
சேர்ந்தபின் தொழுது வீதி [மேல்வாயில்
திங்களென்னும் பிறன்வரவைக் காணுது
செங்கமல மன்ன மாது [கண்ணயரும்

பொங்கியெழுந்து பெற்றெடுத்த பெருவாழ்வே!
சொல்லடுக்கிப்
புகழுடனே நகையைச் சேர்த்துப்
புத்துலக முருவாக்கிப் புதுவீதி மூன்றமைத்துப்
புன்சிரிப்பால் இருளைப் போக்குங்

செங்கதிரே! செங்கரும்பே! செழுங்கனியே!
செங்கீரை யாடியருளே! [தேன்பாகே!
தென்னகத்தின் திருவிளக்கே! திராவிடரின்
செங்கீரை யாடியருளே! [உயிர்மூச்சே!

### 2

அறிவுடனே ஆழ்ந்தன்பை பிணைந்திட்டு நாடோறும்
அடக்கத்தைப் பெற்று நல்ல
ஆர்வத்தைச் சினவந்து கலந்திட்டுப் புரட்சிதனை
ஆன்றோர்கள் மெச்ச பெற்றுத்

தெரியாத மக்களிடை அடக்கத்தை உலவவிட்டுத்
தெளிவுடனே அரச மைத்துத்
திறஞ்சேர்ந்த தம்பியிடை புரட்சிதனை
யோடவிட்டுத்
திசைபோற்றும் பெருமை சேர்த்துப்

புரியாத மக்களுக்குப் புத்தகமாய்த் தானுகிப்
போற்றுத மனிதர் முன்னே
பூவாகிப் பொன்னுகிப் புனிதத்தின் உருவாகிப்
புறப்பட்ட தென்றல் காற்றே!

சிறியாரைப் பெரியாரைத் தூற்றுத பேரறிஞ!
செங்கீரை யாடியருளே!
தென்னகத்தின் திருவிளக்கே! திராவிடரின்
செங்கீரை யாடியருளே! ]உயிர்மூச்சே!

### 3

சுவைமிகுந்த கொதிக்காத சுடுபாகில் தெளிவுடனே
தொங்கவிட்ட மாவைப் போட்டுச்
சுழல்கின்ற வேங்கைமரம் சுமக்கின்ற நறுந்தேனில்
தோய்த்தெடுத்த பலாவை யிட்டுக்

கவின்மிகுந்த கற்கண்டில் கனிவுடனே
தொட்டெடுத்துக்
கமழ்கின்ற கதலிச் சேர்த்துக்
கறவையின் பா லூற்றிச் சர்க்கரையின்
பொடிதெளித்துக்
களிப்புடனே இளஞ்சூ டேற்றிக்

குவியாத கோட்டுப்பூ உரோசாவின் இதழ்தூவி
முந்திரிநல் திராட்சை கொட்டிக்
குலைதெங்கின் தலைகாயின் சீவலிட்டுக் கலங்கிவிட்ட
குன்றுத கலவையினுந்

தெவிட்டாத சொற்பொழிவு பொழிகின்ற
செங்கீரை யாடியருளே! [கார்முகிலே!
தென்னகத்தின் திருவிளக்கே! திராவிடரின்
செங்கீரை யாடியருளளே! [உயிர்மூச்சே!

### 4

தொழிலாளி உருசியாவை ஆளவேண்டு மென்றந்த
தூயலெனின் கனவு கண்டான்
சுட்டழிக்கும் வெறிகொண்ட சாரொழித்து
இசுடாலின்
துணிச்சலுடன் ஆட்சி செய்தான்

அழியாத ஆனந்த சுதந்திரம் அடைந்தோமென்(று)
அமரகவி கனவு கண்டான்
ஆங்கிலேயக் கொள்ளையரை அகிம்சையா
அண்ணலவர் தளைக ளைந்தார் [லோட்டிவிட்ட

முழங்குகின்ற தமிழாய்ந்த தலைமகனே தமிழ்
முதலமைச்சாய் வருதல் வேண்டும் [நாட்டின்
மொழிவிழியாய் எண்ணவேண்டு மென்றந்த
மொழிந்தன்று கனவு கண்டான் [புரட்சிக்கவி

செழித்தோங்குந் தமிழகத்தின் முதலமைச்சாய்
செங்கீரை யாடியருளே! [நின்றவனே!
தென்னகத்தின் திருவிளக்கே! திராவிடரின்
செங்கீரை யாடியருளே! [உயிர்மூச்சே!

### 5

கொடியென்ருல் முக்கொடியே! கொடையென்ருல்
கோனென்ருல் மூன்று வேந்தர் [நற்குமணன்
குன்றென்ருல் பறம்பாகும் கோலென்ருல்
நெடுஞ்செழியன்
கூடலென்ருல் மதுரை யாமே!

அடிகளென்ருல் இளங்கோவே! அன்பென்ருல்
புத்தனுகும்
அகிம்சையென்ருல் காந்தி அண்ணல்
அறமென்ருல் குறளாகும் அருளென்ருல் இயேசு
ஆறென்ருல் பொன்னி யாமே! [பிரான்

கடனென்றால் கதிராகும் கண்ணென்றால் உளமாகும்
கவியென்றால் கம்ப னாகும்
கற்பென்றால் கண்ணகியே! கல்லென்றால் மாணிக்கம்
காஞ்சியென்றால் அண்ணா வாமே!

செடிபூவா நறுமலரே! தீட்டாத ஓவியமே!
செங்கீரை யாடியருளே!
தென்னகத்தின் திருவிளக்கே! திராவிடரின் உயிர்மூச்சே!
செங்கீரை யாடியருளே!

6

(வேறு)

முச்சியில் கொண்டையை முற்றுகை யிட்ட
முல்லைச் சரமாட
முழுமதி வருடி கழுத்தினில் தொங்கிய
முத்து வடமாட

துச்சம் துயரென பிறைமதி வரையும்
சுட்டியு மசைந்தாட
சுரிமணி வளையு மரைமணி வடமும்
தொடர்ந்து சேர்ந்தாட

பச்சை மாமலை குண்டல மாடி
பாடி விளையாட
பனிபல ரடிதொழு தொலித்துத் திருக்குறள்
பாவைச் சிலம்பாட

அச்சாய் விளங்கு மங்கம தசைந்திட
ஆடுக செங்கீரை
அறவழி விரலால் காட்டிடு மண்ணா
ஆடுக செங்கீரை

7

முகமொடு பொட்டும் குழையொடு மணியும்
முடுகி யணிமின்ன
முத்தரை வடமும் சிலம்புடன் கிண்கிணி
மோதி மூண்டொலிக்க

அகமொடு கரமும் கரமுடன் விரலும்
அனுதினம் அருள்பொழிய
அவனியி லுயிரெல்லாம் விழவினை யெடுத்தே
அன்பினால் மனநிறைய

பகலொடு நிலவும் நடம்புரி விழியினில்
பாசம் கரைபுரள
பாகொடு தேன்பால் கலந்திட நாவினில்
பைந்தமிழ் மணம்வீச

அகழ்ந்தினி முகந்து வார்த்திடும் வள்ளல்
ஆடுக செங்கீரை
அறவழி விரலால் காட்டிடு மண்ணா
ஆடுக செங்கீரை

8

காற்கை பெருவிரல் சுவையுண் டமுதவாய்
கனியிதழ் வெளுக்காமே
கதறிநீ யழுதுகீழ் வீழ்ந்தெழுந் தலறியுன்
கண்ணிமை கலங்காமே

சிற்றங் கொண்டுதைத் துதைத்தருந் தொட்டிலுன்
சீரடி சிவவாமே
சிறப்புடன் கவிழ்ந்து தரையினை முட்டியுன்
சிரமது வீங்காமே

ஊற்றெடுத் தருவி வாய்வழி ஒழுகிமண்
ணுருவுட லாகாமே
ஒருகால் முன்னுமற் றொருகை பின்னுமற்
றொளிமுகம் நேர்நிமிர்ந்தே

ஆற்றலைத் தருமுட லசைந்திட இனிதசைந்து
ஆடுக செங்கீரை
அறவழி விரலால் காட்டிடு மண்ணா
ஆடுக செங்கீரை

9

(வேறு)

சந்தன குப்பினில் மூழ்கிய
சொல்லே தன்னாவில்
சங்கினை வைத்தவன் நேருரை
தந்தே எந்நாளும்

பந்தமுங் கெட்டிடா பாசமுங்
கொண்டே எல்லாரும்
பங்கமில் நற்குணம் ஏந்துவாய்
என்றே சொன்னானே

செந்தமிழ் முச்சுடன் வாழ்ந்திட
இன்றே செந்நீரைச்
சிந்திடு; கொட்டிடு சீரினைக்
கண்டே வாழ்வாயே

என்றிடும் தக்கண வேந்தனே!
செங்கோ செங்கீரை
இன்றமிழ் மக்களின் சேவக!
செங்கோ செங்கீரை

10

திங்களை யொப்பவே நீக்கிருள்
நின்றே பொன்போன்ற
செஞ்சொல்வி ளக்கிபன் னாட்டினில்
சென்றே பல்லோர்க்குத்

தங்கத்தை யொத்திடும் நூற்பொருள்
கண்டே அங்சோதி
தங்கியி னித்திடும் பேரொளிக்
குன்றே எந்நாளும்

கங்குல ழித்திடுங் காய்கதிர்ச்
செல்வா இந்நாட்டின்
கண்ணுறக் கத்திலும் மாறிடாப்
பொன்னே அன்பாலே

எங்களு ளத்தில்வாழ் தேவனே!
செங்கோ செங்கீரை
இன்றமிழ் மக்களின் சேவக
செங்கோ செங்கீரை

(வளரும்)

(2-ஆம் பக்கம் தொடர்ச்சி)

மேகக் கூட்டம் பற்றி கூறவந்த கவிஞர், "இரைந்து சப்தமிட்டுக் கொண்டிருக்கும் கடலில் வீழ்ந்து, நீரை உண்டு, கருநிறமுடைய கடலே எழுந்து செல்வதுபோல், நெருங்கி விண்ணிடை மீண்டன. இக்காட்சி எதை ஒத்திருக்கிறது என்றால், ஈகைக் குணத்தில் மிக்க எம்பிரான் நபிகள் நாயகம் (சல்-ம்) அவர்கள் புகழ், இத்தரணி எங்கும் பரவி நிறைகிறது, மீண்டும் புகழ் பரவுவதால், புகழ் நெருக்க மேற்பட்டு; விண்ணிற்கிளம்பி, விண்முகடும் நிறைந்திருப்பதை ஒத்திருந்தது" என்று தன் பாடலில் கூறுகின்றார்:

தருங்கொண்டை நயினார் கீர்த்தி
  சகமெல்லாம் பரந்து மிஞ்சி
நெருங்கியே விசும்பில் அண்டமுகடுற
  நிறைந்தவே போல்
இருங்கண வெள்ளைமேகம் இரைபசுங்கடல்
  வீழ்ந்து உண்டுஓர்
கருங்கடல் எழுந்தது என்னக்
  ககனிடை செறிந்து மீண்ட

இவ்வாறு திரண்டெழும்பி நின்ற மேகம், அரபு நாட்டின் தலைநகராகிய மக்கமாநகரை யடுத்து, விண்ணளவு உயர்ந்திருந்த மலை, மறையும்படி மழையாகச் சொரிந்தது.

இப்படி பெய்கின்ற காட்சி—மழைதரும் ஒலி, ஒளி அத்தனையும் நம் மனக்கண்முன் கொண்டுவந்துள்ள கவிஞர், தன் பாடலில்;—

அகில மெங்கணுந் திடுக்கிட வாய்திறந்து அதிர்ந்து மிகும் மழைக்குலம், அடிக்கடி விழிப்பபோல் மின்னிக் ககனம், எண்டிசை அடங்கலும் பரந்து, கால் ஊன்றிச் சிகர பூதரம் மறைதரச் சொரிந்தன செருமி—என்று வாய் திறந்து அதிருகின்றார்.

இந்த, பயங்கரமான மழை பகைமையை ஒழிக்கின்றது; மிருகங்களால் அச்சாரலைத் தாங்க முடியவில்லை; முகத்தை தன் இனத்தின் வயிற்றோடு ஒட்டிக் கொண்டு ஒரே இடத்தில் தங்குகின்றன. யானைகளும் சிங்கங்களும், தங்களுக்குள் இருந்துவரும் பாரம்பரியப் பகையை மறந்து, சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டன போன்று, ஓரிடத்தில் சார்ந்து நிற்கின்றன. யானை—மதம் போக்கியது; சிங்கம்—சீற்றத்தை விட்டது; இத்தகைய அற்புதத்தைச் செய்தது மழை என்று கவிஞர் கூறுகிறார்:-

பம்பியெங்கணும் பொழிதரு சாரல் வாய்ப்பட்டுத்
தம்மினத் தகடுறக் கொடுகிய குளிர் கலக்க
மும்மதக் கரிகளும் அரிகளும் முரண்அறவே
சம்மதித்து ஒருபுடை கிடப்பன எனச்சாரும்.

மழைநீர், மலைமீது வீழ்ந்து, அருவியாக மாறி, பல செல்வங்களையும் அடித்துச் சுருட்டிக்கொண்டு ஓடிவருதைப் பார்க்க கவிஞருக்குச் சகிக்கவில்லை; இது அநீதி என்று கருதுகிறார். அந்த அருவிக்கூட்டம் விலைமகளை ஒத்து, மலை அரசனுடைய செல்வங்களாகிய பொன்னையும் நாகரத்தினங்களையும் எண்ணத்தொலையோ எத்தனையோ பொருள்களையும் சுருட்டிக் கொண்டு எல்லை விட்டு ஓடுகிறது. சற்று முன்பு மலையரசனுடைய புயங்களைத் தழுவி அவனுக்கு இன்பமூட்டியது இவ்வருவி! இன்பத்தில் திளைத்து, அவன் மெய்மறந்து இருக்கும் நிலையில், எல்லாச் செல்வங்களையும் கவர்ந்துகொண்டு ஓடிவரும் அருவி, விலைமகளை ஒத்ததுதானே! இதோ, கவிஞர் கூறும் சான்று:

மலையெனும் அரசன் புயங்களைத்தழுவி
  மகிழ்ச்சிசெய்து அவனுழைச் சிறந்த
நிலைகெழு பொன்னும் உரகசெம்மணியும்
  நித்தில ராசியுங் கவர்ந்து
தொலைவிலாப் பண்டம் அனைத்தையும் வாரிச்
  சுருட்டியே, எல்லைவிட்டு அகலும்
விலைமகள் போன்றும் பலப்பல முகமாய்
  வெள் அருவித்திரள் சாயும்.

விலைமகளாக வருணிக்கப்பட்ட அருவி, நதியாக ஓடுகிறது. அந்நதியை, நங்கை என்று கூறுகிறார் கவிஞர். நதி நங்கை என்றால், அவளுக்கு உடை எங்கே? ஒளி படைத்த கண் எங்கே? கருமேகத்தைப் பழிக்கும் கூந்தல் எங்கே? இப்படிக் கேட்டுக் கொண்டேயிருந்தால், கவிஞர் பதில் சொல்லாமலா இருப்பார்! இதோ:—

பரந்த வெண்ணுரைத்து கிலுடுத்து அறல் சூழல்
  பரப்பி
விரைந்து பாய்கயல் விழியெனத் திரைக்கரம் வீசிச்
சுரந்த புற்புதத் தனத்துடன் சுழியுந்தி தோற்றப்
பொருந்து மாநதி விளங்கு இழை மகளிரைப்
  போலும்.

வெண்ணுரை, நதி என்ற நங்கையின் ஆடையாம்; அதை அவள் உடுத்தியுள்ளாள். அறல், அதாவது அருவியின் இருகரையிலும் உள்ள கருமணல், அவள் கூந்தலாம். பாய்ந்து ஓடும் கெண்டை மீன்கள் அவள் கண்களாம். நதியின் அலைகள் அவள் கரங்களாம்.

இப்படிக் கூறுகின்ற கவிஞர், வயல்களில் நீரைத் தேக்கி, உழவு செய்து, விதைத்து, நாற்றை வளர்த்து, அவற்றைப் பிடுங்கி நடவேண்டிய நிலைக்கு வந்துள்ளார். அன்றும் இன்றும் நாற்றை நடுபவர் நங்கையர் தானே.........!? இனி எவரோ...!? நாற்றுநடும் நங்கையர் எப்படிப்பட்டவர்? கவிஞர் கூறுவதைக் காணலாமே:—

கோதற எழுந்த நாற்றினைப் பறித்துக்
  குவித்திடு முடியிட மடுத்துத்
தீதுறுங் கருங்கண் செய்வாய் வெண்பல்
  சிற்றிடைக் கடைசியர் வாரிப்
பூதர மனைய சுணங்கு அணிமுலையில்
  புள்ளியிற் சேதகம் போர்ப்ப
ஆதரம் பெருகி நிரைநிரை வடிவாய்
  அணி அணி நாற்றினைநடுவார்.

ஆம் நாற்றுநடும் நங்கையரின் கண்கள் பொல்லாதவையாம், திடமுள்ள ஆண்களுடைய உள்ளத்திலும் கூடத் தீங்கு செய்து விடக்கூடிய, ஆற்றல் மிக்க கருங்கண்கள்! கொவ்வை போல் சிவந்த வாய்! வெண்முத்தைப் பழித்திடும் பற்கள்! மிக நுண்ணிய இடை! இத்தனை அழகு பொருந்திய, அந்தக் கடையர் குலப்பெண்கள், நாற்றுக்களைப்பிடுங்கித் தங்கள் மார்போடு அணைத்துக் கொள்கிறார்கள். நாற்று முடியை அணைத்ததனால் சேற்றுக் புள்ளிகளும் விழுகின்றன. அணைத்த நாற்று முடியிலிருந்து நாற்றுக்களை எடுத்து அழகாக வரிசை வரிசையாக நடுகிறார்கள்!

பாலை நிலமாம் அரபு நாட்டை, பண்டைத் தமிழ் நாட்டை உருவாக்கிக் காட்டுவது போல் காட்டும் பாங்கைக் கவிஞர் உமறுவிடம் காணலாம்:-

நினைக்கும் பொற்பொருளே நிந்தனை; மற்றோர்
நிந்தனை, சிந்தனை இலையே!
இனக் கருஞ்சுரும்பு மதுத்துளி பருந்தும்
இவையலால் மதுப்பிறிது இலையே!
சினக்கரி முனைக்கோட்டு இளமுலைப் புலவி
திருத்தும் பொய் அலது பொய் இலையே!
வனக்கனி கருத்த குலைக்களவு அலது
மறுத் தொரு கொலைக்களவு இலையே!

இந்த நாட்டில் நிந்தனை ஒன்றே உண்டு. அதாவது, பொருள் மிகுதியால், பொருளை வெறுக்கும் நிந்தனையே! அது தவிரவேறு நிந்தனையான எண்ணமில்லை. மதுக்குடியும் உண்டு; அதுவும் வண்டினங்கள், மலர்களில் தேனை அருந்துவது தவிர வேறெங்கும், மதுவருந்துதல் கிடையாது. பொய் உண்டு; அது ஒரே ஒரு பகுதியில் உண்டு! காதலனைக் கூடும், காரிகைகளிடம் மட்டுமே உண்டு! தங்கள் நாயகர்களிடம், கோபம் கொண்டு உள்ளவர்களைப் போலவும் கல்வியை வெறுப்பவர்களைப் போலவும் நடித்து, ஊடும் பொழுது, அவர்கள் உரைக்கும் பொய் யல்லாது வேறு பொய் இல்லை! களவும் உண்டு; அதுவும், வனத்திடை உள்ள மரங்களில் பழுத்த கனியை, வழிப்போக்கர்கள் அடித்துச் சுவைக்கும் குலைக் களவு தானேயன்றி, கொலைக் களவு ஒன்றும் அந்த நாட்டில் இல்லை!

இப்படி கவிஞர், கற்பனையில் ஒரு அருமையான நாட்டைக் காட்டும் போது, நமக்கு நம் பைந்தமிழ் நாட்டை சித்தரித்துக் காட்டுவது போன்று தோன்றவில்லையா! பாவலர்' பாண்டிய நாட்டில் பிறந்தவர் என்பதை எண்பிக்கவில்லையா! நாட்டைக் கூறிய கவிஞர், நகரைக் கூறுகின்றார். அவருடன் சென்று மாண்புறு மக்கமா நகரைக் காண்போம். அரபியின் அணிவேய்ந்த நகரம் மக்கமா நகரம்! மாறுப்புகழுடைய சீறுப்புராணத்தில் அதன் அழகுகள் அத்தனையும் சுவைபடச் சொல்லப்படுகின்றன. அங்கே, எத்தனை எத்தனைக் காட்சி நிலங்கள்! எத்தனை எத்தனைப் புதுமை வளங்கள்! இவைகள் அனைத்தையும் அருந்தமிழில் உமறுப்புலவர், அழியாத ஓவியங்களாகத் தீட்டியுள்ளார்கள்!

விரி கதிர் எறித்த மணிவலை உகுப்ப
விரிதிரை அகழ் எனுந் தடத்தில்
எரி சிகைக் கிரணப் பதுமமா மணியின்
இனம்பல சூழ்ந்திருந்து இலங்கப்
புரி முறுக்கு அவிழ்ந்த பொன் இதழ்க்கமலம்
பூத்திருந்தது வெனப் புரிசை
தெரிதரச் சிறந்து செல்வமும் செருக்கும்
திகழ்தர வீற்றிருந்ததுவே.

அலை நலம் வாய்ந்த அருந்தடாகம்! அகன்ற தடாகம்! அதில் விரிகதிர் பரப்பும் மணிகளைச் சங்கங்கள் நல்க, பதுமராகத்தின் ஒளிக்கீற்றுக்கள் போல ஒளியுமிழும் இனம் பல சூழ்ந்திருந்து அழகைக் கொட்ட, கட்டவிழ்ந்த பொன் இதழ்களை உடைய தாமரைபூத்து இருந்தன; கோட்டை எழில் எல்லாம் விளங்கச் சிறந்து, செல்வத்துடனும் செருக்குடனும் மக்கமா நகரம் பொலிகின்றதாம்.

மக்கமா நகரம் எப்பொழுதும் ஒளி வெள்ளத்திலேயே மிதக்கின்றதாம். அதற்குரிய காரணத்தைக் கவிஞர் உமறு, மிகவும் அழகுபடச் சொல்கின்றார். எனவே, வியப்பு நிலையில் பாடலைத் தொடங்குகின்றார்:—

கானகத்துறையும் வயிர ஒண் கதிரோ
கடல்படு நித்திலக் கதிரோ
தேனவிழ் பதும மணிக்கதிர் அதுவோ
சிறந்திடு மக்கமா நகரில்
வானவர்க் கிறைவர் ஜிபுறயீல் பலகால்
வந்தவர் மெய் ஒளிபாய்ந்தே
ஈனமில் நகரஞ் செழுங்கதிர் பரப்பி
இருப்பது பிறிது வேறிலையே.

மக்கமா நகரம் ஒளி நகரமாக இருக்கின்றதால். அது கானகத்து வைர ஒள்ளியக் கதிரோ! கடலில் கிடைக்கின்ற முத்தின் ஒளியோ! அல்லது பதுமராகத்தின் மணிக்கதிரோ! என்று கேட்கின்ற அளவுக்கு அங்கே ஒளி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இதற்குக் காரணம் என்ன வென்றால், வானவர்களுக்கெல்லாம் தலைவனுகவும் ஒளிமயமானவனுமான ஜிபுறயீல் (அலை) அவர்கள் பலகால் அந்த நகரத்திற்கு வந்து சென்றமையால், அவரின் மெய்யொளி பாய்ந்ததனால் மக்கமா நகரம் ஒளி மிகுந்த நகரமாக இருக்கின்றது — என்கின்ற கவிஞரின் கவிதைத் திறனைப் போற்றாமல் இருக்க முடியுமா?

'வானவர்க்கு நாயகராம் ஜிபுறயீல் (அலை) பலகால்' வந்ததால் அங்கே ஒளி வெள்ளத்திற்குப் பஞ்சமிருக்க வழியுண்டா? எனவேதான், அந்நகர், 'செழுங்கதிர் பரப்பி இருப்பது பிறிது வேறிலையே' என்றார்!

இப்படி இலக்கியம் படைத்து, மனுக்குலம் பண்படைய வாழ்ந்த கவிஞர்களில் 63 ஆண்டுகள் வாழ்ந்து, தமிழ்ப் பணியாற்றி, எட்டயபுரத்தில் அடக்கம் கொண்டுள்ள பாவலர் உமறுவை நினைவு கூர்ந்து, 'படித்துச் சுவைத்துப் பண்படைவதற்கு உரியதே இலக்கியம்' என்பதை நினைந்து, எழுத்தாளர்கள் எழுது கோலை ஏந்துவார்களாக.

(6—4—74 அன்று புதுவை வானொலியில் ஒலிபரப்பானது. நிலையத்தார்க்கு நன்றி)

★

# ‘குட்டிக் கதைகள் ஒரு நூறு’

— புலவர். அரிமதி தென்னகன்

## 49. வாழ்க வறுமை

தனக்கே உரிய மிடுக்கோடும் மிரட்டலோடும்,

போராட்டம்

தன் பரிவாரங்களோடு நடை போட்டது.

கையில் கத்தி,

பையில் கல்,

இன்னும்,

வகை வகையான ஆயுதங்கள்!!

வாயோ,

காந்தியை வாழ்த்துகிறது!

அகிம்சையைப் போற்றுகிறது!!

எனவே,

வறுமை, போராட்டத்தைக் கண்டு அஞ்சிப் பதுங்கியது.

ஓடி விடலாமா என்று திட்டமிட்டது.

‘நில்’ என்னும் குரல் கேட்டதும், உலகத்தைவிட்டே ஓட நினைத்த வறுமை நின்றது,

“ஏன் என்னைப் பார்த்துப் பதுங்குகிறாய்?

எதற்காக என்னைக் கண்டு நடுங்குகிறாய்?

உடம்பு நடுங்க ஓடப்பார்கிறாயே என்ன காரணம்?”

போராட்டம் இப்படிக் கேட்டது.

வறுமை அதற்கு,

“என்னை ஓடத்தானே தாங்கள் பிறப்பெடுத்தீர்கள்!!

நான் அஞ்சத்தானே நீங்கள் வருகின்றீர்கள்!

நான் மறையத்தானே நீங்கள் உழைக்கின்றீர்கள்!!

என்னை ஒழிப்பதுதானே உன் கடமை, தொண்டு, நோக்கம் எல்லாம்” என்று பயந்து கொண்டே கேட்டது.

வறுமையின் பேச்சை கேட்டுப் போராட்டம் சிரித்தது.

வறுமையோ ஒன்றும் புரியாமல் விழித்தது.

“நீ ஒழிந்து விட்டால் எனக்கு வேலை ஏது?

நீயும் வாழ்ந்து உன் வயதும் வளர்ந்து உன் குடும்பமும் குலமும் செழித்தால்தானே எனக்குப் பெருமை!!

நீ ஓடிவிட்டால் எனக்கு உயிர் ஏது? வாழ்வு ஏது?”

“ஒன்றும் விளங்க வில்லையே!!?

வறுமையின் பார்வையே பரிதாபமாக இருந்தது.

“உன்னை நான் மிரட்டுவேன், போய் விடாதே; ஒழிப்பேன் என்பேன் ஓடி விடாதே; என்ன புரிகிறதா?”

போராட்டத்தின் விளக்கத்தைக் கேட்டு வறுமை மயங்கி விழுந்தது.

போராட்டம், வறுமையின் முகத்தில் தண்ணீர் தெளித்தது.

வறுமை கண் திறந்தது!

போராட்டத்தின் முகம் மலர்ந்தது!


வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

★ குர்தாக்கள்
★ பெல் பாட்டம்கள்
★ லுங்கிகள்
★ சேலைகள்
★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள் . . .
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை! ஆதாயமான உழைப்பு!

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.
(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)
எழும்பூர் :: சென்னை-8.

# நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## பன்னிரண்டு ஆண்டுகளில்
## வருவாய் இரட்டிப்பாகிட
## தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

## குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
## இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் (போன் : 2970) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.